### ‘ஆளுநரே பல்கலைக் கழக வேந்தராக நீடிக்கலாம்’ என்ற கருத்து:

# பதவி சுகத்திற்காக காங்கிரஸ் தனது கொள்கையை மாற்றிக்கொள்வதா?

## உயர்கல்வித்துறை அமைச்சருக்கு கழக துணைப் பொதுச்செயலாளர் க.பொன்முடி கண்டனம்!

**சென்னை, மே 29 -**

**“ஆளுநரே பல்கலைக் கழக வேந்தராக நீடிக்கலாம் என்று தமிழக உயர் கல்வித்துறை அமைச்சர் கூறியிருப்பது கண்டனத்திற்குரியது” என்று கழக துணைப் பொதுச் செயலாளரும் முன்னாள் உயர்கல்வித் துறை அமைச்சருமான க. பொன்முடி அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.**



இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

தமிழகத்தில் உள்ள பல்கலைக் கழகங்களின் வேந்தராக முதலமைச்சரை நியமிக்கும் சட்ட முன்வடிவினை கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான கழக ஆட்சியில் காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள், சி.பி.ஐ., சி.பி.எம்., அ.தி.மு.க., ம.தி.மு.க. உள்ளிட்ட பா.ஜ.க. அல்லாத அனைத்துக் கட்சி களின் ஆதரவோடு தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டு, அச்சட்டம் ஆளுநர் வழியாக குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டு, அச்சட்டமுன் வடிவுக்கு அனுமதி வழங்கப்படாத நிலையில், புதியதாக பொறுப்பேற்றுள்ள த.வெ.க. அரசின் உயர்கல்வித் துறை அமைச்சரும் - காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவருமான விஸ்வநாதன் “ஆளுநரே பல்கலைக் கழக வேந்தராக நீடிக்கலாம்” என்று கருத்து தெரிவித்திருப்பது மிகவும் கண்டனத்திற்குரியதாகும். மேலும் இது மாநில உரிமைகளுக்கு எதிரானது ஆகும்.

**பா.ஜ.க.வின் அடிவருடியாக மாறிய காங்கிரஸ்!**

’ஒன்றிய பா.ஜ.க. அரசால் நியமிக்கப்பட்ட ஆளுநரே பல்கலைக் கழக வேந்தராக தொடரலாம்‘ என்று பா.ஜ.க.வுக்கு ஒத்து ஊதும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் விஸ்வநாதனின் கருத்து பா.ஜ.க. அரசின் அடிவருடியாக காங்கிரஸ் மாறிவிட்டதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

இச்சட்டம் நிறைவேறு வதற்கு ஆதரவு தெரிவித்த காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒருவரே இன்றைக்கு அதற்கு எதிராக பேசுவது என்பது பதவி சுகத்துக்காக காங்கிரஸ் கட்சி தனது கொள்கையை மாற்றிக் கொண்ட தாகத் தெரிகிறது. இதை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் கடுமையாக கண்டிக்கிறேன்.

இவ்வாறு முன்னாள் உயர்கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

---

### மாநில உரிமையை அடமானம் வைக்கும் செயலாக

# அரசு விழாவில் முதலில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாட பிரதமரிடம் இன்றைய முதல்வர் கெஞ்சிக் கேட்பதா?

## சட்டப் பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு வேதனை!

சென்னை, மே 29 -

மாநில உரிமைகளை அடமானம் வைக்கும் செயலாக புதுடெல்லி சென்றுள்ள இன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் அங்கு பிரதமர் மோடியைச் சந்தித்து அரசு விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை முதலில் பாடுவதற்கு கெஞ்சி அனுமதி கேட்டிருப்பது மாநிலசுயாட்சிக்கு எதிரானது என சட்டப் பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு வேதனை தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து மு.அப்பாவு அவர்கள் தெரிவித்திருப்பதாவது: -

மனோன்மணியம் சுந்தரனார் எழுதிய பாடலில் சில நீக்கங்களைச் செய்து தமிழ்த்தாய் வாழ்த்தாக அரசு நிகழ்ச்சிகளின் தொடக்கத்தில் இசைக்க வேண்டும் என்று அன்றைய முதல்வர் கலைஞர் அவர்களால் 23.11.1970ல் அரசாணை வெளியிடப்பட்டது. தொடர்ந்து வந்த எல்லா முதல்வர்களும் அதனை நடைமுறைப்படுத்திய நிலையில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடல் பாடப்படும் போது அனைவரும் எழுந்து நின்று மரியாதை செலுத்த வேண்டும் என்று அரசாணையைப் பிறப்பித்தவர் முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

இன்று அந்த தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடலை அரசு நிகழ்ச்சிகளில் முதலில் இசைக்க அனுமதி தாருங்கள் என்று பிரதமரிடம் தமிழக முதலமைச்சர் அவர்கள் கெஞ்சி இருப்பது மாநில சுயாட்சி கொள்கைக்கு எதிரானது.

இதைப் பார்க்கும்போது பாவேந்தர் பாரதி தாசன் எழுதிய, “அக்கா வந்து கொடுக்க சுக்கா மிளகா சுதந்திரம் கிளியே” என்ற பாடல் தான் நினைவுக்கு வருகிறது.

சுக்கையும் மிளகையும் யாரும் யாருக்கும் கொடுக்கலாம் வாங்கலாம்.

ஆனால் சுதந்திரத்தை கொடுக்கவும் முடியாது வாங்கவும் கூடாது, அது நமது உரிமை என்பதே அதன் பொருள்.

இன்று தமிழக அரசுக்கு இருக்கின்ற உரிமையை பயன்படுத்த பிரதமரிடம் முதலமைச்சர் அனுமதி கேட்டது மாநில உரிமையை அடமானம் வைக்கும் செயல்..

இவ்வாறு மு.அப்பாவு அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

### குன்றத்தூர் தா.மோகலிங்கம் 14–வது ஆண்டு நினைவு நாள்

# முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் - கழகத்தினர் திரண்டு மலர் அஞ்சலி!

*காஞ்சிபுரம், மே 29 -*

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்களின் தந்தையார் - குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய முன்னாள் தலைவர் தா. மோகலிங்கம் அவர்களின் 14-வது ஆண்டு நினைவு நாளையொட்டி முன்னாள் அமைச்சர் தா. மோ.அன்பரசன் மற்றும் மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத்தினர் பெருந்திரளாக திரண்டு வந்து மலர் அஞ்சலி செலுத்தினார்கள். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் - கழக நிர்வாகிகள் பங்கேற்று சிறப்பித்தனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்களின் தந்தை, குன்றத்தூர் பேரூர் கழக முன்னாள் செயலாளர் - குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய முன்னாள் தலைவர் நினைவில் வாழும் தா.மோகலிங்கம் அவர்களின் 14-வது ஆண்டு நினைவு நாள் நேற்று முன்தினம் அனுசரிக்கப்பட்டது.

குன்றத்தூர் செங்குந்தர் திருமண மண்டபத்தில் அன்னாரது திருஉருவப் படம் மலர்களால் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்தது. அவரது படத்திற்கு முன்னாள் அமைச்சர் தா. மோ.அன்பரசன் மற்றும் அவரது குடும்பத்தினர் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கு. செல்வப்பெருந்தகை, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் இ. கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன், எஸ்.எஸ். பாலாஜி, கழக தொழிலாளர் அணி செயலாளர் பி.டி.சி.செல்வராஜ், கழக மருத்துவர் அணி துணைச் செயலாளர் டாக்டர் கிருத்திகா தேவி, கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மாறன், கழக சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் சாய் ஜெயகாந்த் பாரதி, கழக தீர்மானக்குழு தலைவர் கவிஞர் தமிழ்தாசன், கழக இலக்கிய அணி துணைச் செயலாளர் ஆர்.தசரதன், தொ.மு.ச.பேரவைச் செயலாளர் பொன்னுராம்,

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வீ.தமிழ்மணி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் செஞ்சி சிவா, ஜி.சி.அன்புச்செழியன், க.அன்புச்செல்வன், ஆதிமாறன், தாம்பரம் மாநகர துணை மேயர் கோ.காமராஜ், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டப் பொருளாளர் சன்பிராண்ட் ஆறுமுகம், தொழில் அதிபர் அரவிந்த்குமார், பகுதி செயலாளர்கள் பி.குணாளன், என்.சந்திரன், வே.கருணாநிதி, திருநீர்மலை த.ஜெயகுமார், பெருங்களத்தூர் எஸ்.சேகர், மாடம்பாக்கம் ஆர்.நடராஜன், ஏ.கே.கருணாகரன்,

ஒன்றியச் செயலாளர்கள் ந.கோபால், எஸ்.டி. கருணாநிதி, பையனூர் எம்.சேகர், ஏ.வந்தேமாதரம், மூவரசம்பட்டு ரவி, மண்ணிவாக்கம் எம். டி.லோகநாதன், கே.பி. ராஜன், திருமுடிவாக்கம் மணி, நகரச் செயலாளர்கள் டி.பாபு, எஸ்.நரேந்திரன், எம்.கே.டி.கார்த்திக், எஸ்.ஜபருல்லா, கோ.சத்தியமூர்த்தி, த.வினோத்குமார், பேரூர் செயலாளர்கள் மு.தேவராஜ், ஜி. டி.யுவராஜ், ஆர்.சதீஷ்குமார், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் எம். எஸ்.கே.இப்பிராகிம், எம். ஆர்.சீனிவாசன், ஆர்.எஸ். சங்கர், க.தேவேந்திரன், மூவரசம்பட்டு சதீஷ், கே. எத்திராஜ், ம. கணேஷ் பாபு, செ.அருள்தேவி, ஜிஜேந்திரன் ராமு,

கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் கோல்டு டி.பிரகாஷ், எல்.பிரபு, உதயா கருணாகரன், ஆர்.ஆர். ஜெயராம் மார்த்தாண்டம், தி.க.பாஸ்கரன், டி. ஆர்.சாரதி பெரியநாயகம், ஜான் தினகரன், செந்தில் தேவராஜ், டி.பி.செந்தில்குமார், கே.ஆர்.ஆனந்தன், பொன்.ரமேஷ் கவி, ஆர். கே.சையத் யூசப், கர்ணன், பெப்சி கண்ணன், காஞ்சிபுரம் மாவட்ட முன்னாள் இளைஞர் அணி துணை அமைப்பாளர் எஸ். பொன்னா(எ)வெங்கடேசன்,

குன்றத்தூர் பேரூராட்சி முன்னாள் தலைவர் டி.கே.குமரசாமி, குன்றத்தூர் நகர முன்னாள் செயலாளர் கே.கே.ராஜமாணிக்கம், குன்றத்தூர் நகர மன்ற துணைத் தலைவர் தே.திருநாவுக்கரசு, நந்திவரம் - கூடுவாஞ்சேரி நகர மன்ற துணை தலைவர் ஜி.கே.லோகநாதன், அச்சிறுப்பாக்கம் பேரூராட்சி முன்னாள் தலைவர் எஸ்.உசேன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

### கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு

# ஒரே நாளில் இரண்டு முறை வெடிகுண்டு மிரட்டல்!

## மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சோதனை!

*கோவை, மே 29 -*

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு 40க்கும் மேற்பட்ட முறைக்கு மேல் வெடிகுண்டு மிரட்டல், நேற்று முன்தினம் ஒரே நாளில் இரண்டு முறை வெடிகுண்டு மிரட்டல், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெடி குண்டு தடுப்பு பிரிவு காவல்துறையினர் மோப்ப நாயுடன் தீவிர சோதனை நடத்தினர்.

கோவையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பாஸ்போர்ட் அலுவலகம், நீதிமன்ற அலுவலகம் உள்ளிட்ட அரசு அலுவலகங்களுக்கு கடந்த சில மாதங்களாக அடிக்கடி வெடிகுண்டு மிரட்டல் வந்த வண்ணம் உள்ளது.

ஆனால் தொடர்ந்து வெடிகுண்டு மிரட்டல் விடுக்கும் நபரை காவல்துறையினரால் கண்டுப் பிடிக்க முடியவில்லை.

நேற்று முன்தினம் காலை மற்றும் மாலையில் இரண்டு வேளையில் கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலக இமெயில் முகவரிக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது. இதனை தொடர்ந்து ஊழியர்கள் உயர் அதிகாரிகள் மற்றும் காவல்துறை மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்துக்கு தகவல் கொடுத்தனர். அதன்பேரில், வெடி குண்டு தடுப்பு பிரிவு காவல்துறையினர் மோப்ப நாயுடன் வந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகவளாகம், பார்க்கிங் பகுதி, ஒவ்வொரு அலுவலகம் என தீவிர சோதனை நடத்தினர்.

ஆனால் நீண்டநேர சோதனைக்கு பின்னர் இந்த மிரட்டல் வெறும் புரளி என்பது தெரியவந்தது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு 40க்கும் மேற்பட்ட முறைக்கு மேல் வெடிகுண்டு மிரட்டல் வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

மிரட்டல் ஆசாமி டார்க் வெப்சைட் மூலம் மெயில் அனுப்புவதால் முகவரியை வைத்து கண்டுப்பிடிப்பதில் சிக்கல் உள்ளதாக காவல் துறையினர் தெரிவிக்கின்றனர்.

---

### கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் – ஓசூர் கிழக்கு

# ஒன்றியச் செயலாளர் டாக்டர் லோகேஷ் மறைவு!

## ஒய்.பிரகாஷ் – கழகத்தினர் அஞ்சலி!

*கிருஷ்ணகிரி, மே 29 -*

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட தி.மு.க., ஓசூர் கிழக்கு ஒன்றியச் செயலாளரும், தேசிய கபாடி வீரருமான டாக்டர் லோகேஷ் ரெட்டி, உடல்நலக்குறைவு காரணமாக இயற்கை எய்தினார். இவருக்கு வயது 54.



அவரது உடலுக்கு கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஒய். பிரகாஷ், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் முருகன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் சட்ட மன்ற உறுப்பினர் சீனிவாசன் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் என ஏராளமான கழகத்தினர் நேரில் அஞ்சலி செலுத்தினார்கள்.

மறைந்த லோகேஷ் ரெட்டிக்கு வித்யா (48) என்ற மனைவியும், ஷசாங்க் (25) என்ற மகனும் உள்ளனர். அவரது மகன் பி.எச்.டி படித்து வருகிறார்.

லோகேஷ் ரெட்டியின் மறைவு குறித்து மேற்கு மாவட்டச் செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ் தனது அறிக்கையில்,

கழகத்தினருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் பேரிழப்பாகும்.

அவரது ஆத்மா சாந்தியடையவும், அவரது குடும்பத்தினருக்கு என்றும் திராவிட முன்னேற்றக் கழகம் உறுதுணையாக இருக்கும் என குறிப்பிட்டுள்ளார்.



கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் நற்பெயரை கெடுக்கும் விதமாக சமூகவலைதளங்களில் அவதூறு பரப்பும் நபர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க கோரி கோவை வடக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் கோவை ஹரிஷ் தலைமையில், கோவை மாநகர காவல் ஆணையர் மருத்துவர் கண்ணன் அவர்களிடம் புகார் மனு அளித்தனர். இதில் மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் கார்த்திக் தண்டபாணி, மாநகர் மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் பாபு, வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் முருகானந்தம், தலைமை கழக பேச்சாளர் நாக நந்தினி, சமூகவலைத்தள பொறுப்பாளர் நித்தியா, தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் பிரேமாவதி, விஷால், நிர்மல், ரங்கசாமி காளியப்பன் உடன் இருந்தனர்.

---

### தேனாம்பேட்டை சைதாப்பேட்டை இடையேயான

# உயர்மட்ட மேம்பாலப் பணிகளில் மெத்தனம்!

## பொதுமக்கள் குமுறல்!

*சென்னை, மே 28 -*

சென்னை தேனாம் பேட்டை - சைதாப் பேட்டை இடையேயான மேம்பாலப் பணிகள் மெத்தனமாக நடைபெற்று வரும் நிலையில், அதனை விரைந்து முடித்து பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

சென்னை - அண்ணா சாலையில் தேனாம் பேட்டை முதல் சைதாப் பேட்டை வரையிலான உயர்மட்ட மேம்பாலப் பணிகளுக்கு 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அப்போதைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார். 621 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3.2 கிலோ மீட்டர் நீளத்திற்கு கட்டப்படும் மேம்பாலம் பணிகள் வேகமாக நடைபெற்று வந்தன. இது, மெட்ரோ சுரங்கப் பாதையின் மேல் அமையும் இந்தியாவின் முதல் உயர் மட்ட பாலமாகும்.

இதன்மூலம் எல்டாம்ஸ் சாலை, எஸ்.ஐ.இ.டி கல்லூரி, செனடாப் சாலை, நந்தனம், சி.ஐ.டி. நகர் உள்ளிட்ட முக்கிய சாலை சந்திப்புகளில் போக்குவரத்து நெரிசல் குறைவதுடன், பயண நேரமும் குறையும்.

சென்னை நகரின் மிக முக்கிய போக்குவரத்து பகுதியான இங்கு, கட்டப்பட்டு வரும் பிரம்மாண்ட மேம்பாலப் பணிகள் தேர்தலுக்கு முன்பு வரை இரவு பகலாக நடைபெற்று, ஒட்டுமொத்த திட்டத்தில் சுமார் 80 சதவீத பணிகள் நிறைவடைந்திருந்தன.

தேர்தல் முடிவுகள் வெளியான பிறகு, பணிகள் நடைபெறுகிறதா, இல்லையா என்பது தெரியாத அளவுக்கு மிகவும் மெதுவாக நடப்பதாக புகார்கள் எழுந்துள்ளன.

கடந்த தி.மு.க. ஆட்சியில் கொண்டு வரப்பட்ட இந்த திட்டத்தை, எந்தவிதமான காழ்ப்புணர்வும் இல்லாமல் எஞ்சிய பணிகளை விரை வில் முடித்து, விரைவில் மக்கள் பயன்பாட்டுக்கு திறக்க வேண்டும் என அப்பகுதி பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருமதி தையல்நாயகி முத்துசாமி

### மே 29 (2001)



**சென்னை, துறைமுகம் பகுதிக் கழக மகளிர் அணி அமைப்பாளராகவும் – சிவகங்கை மாவட்டக் கழக மகளிர் அணி அமைப்பாளராகவும் பணியாற்றியவர்.**

**இந்தி எதிர்ப்புப் போராட்டம் – பானை உடைப்புப்போராட்டம் – நீதிகேட்டு நெடும் பயணம் போன்ற கழகம் நடத்திய போராட்டங்களில் பங்கேற்றவர்.**

**பால்கமிஷன் அறிக்கை தொடர்பாக தலைவரை அவரது இல்லத்தில் கைது செய்ய முற்பட்டபோது, காவல்துறை வாகனம் முன்பு படுத்து மறியல் செய்து, தடியடிக்கு ஆளாகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்.**

**இருதய அறுவை சிகிச்சை செய்து கொண்ட நிலையிலும் காரைக்குடியில் சித.சிதம்பரம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஈழத் தமிழர் ஆதரவு ரயில் மறியல் போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**